**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை – திரு. S.முகமது யூசுப் நவாஸ், B.A.,B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை**

**2025ம் ஆண்டு டிசம்பர் 9ம் நாள் செவ்வாய்கிழமை**

**இடைக்கால மனு எண். 3/2025**

**இன்**

**அசல் வழக்கு எண். 3/2014**

1.பா.போஸ்
2.பா.இராமு ஆசாரி ...... மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள்

**/ எதிர் /**

1. சிவகங்கை மாவட்டம், மானாமதுரை டவுனில் இருக்கும் அருள்மிகு ஸ்ரீ நிரதலமுடைய அய்யனார் சோனையா சுவாமி அதன் தற்போதைய டிரஸ்டி மூலம் ...... எதிர்மனுதாரர்/ வாதி

2.பூபதி ...... எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி

இம்மனு என்முன்பு 21.11.2025 தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.செல்வராஜ் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், 2 எதிர்மனுதாரர் தரப்பில் தோன்றாத்தரப்பினராகியுள்ளநிலையில், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

**1.** மனுதாரர்கள் / 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் கட்டளை 9 ரூல் 7 உரிமையியல் விசாரணை சட்டத்தின் படி தாவா வழக்கில் கடந்த 01.04.2016ம் தேதியன்று தங்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட Exparte உத்தரவை ரத்து செய்து தாவா வழக்கினை மேல்நடத்திட உத்தரவாக வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள்.

**2. மனுவின் சுருக்கம்:**

தாவா வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தங்களுக்கு எதிராக 01.04.2016 ம் தேதியன்று Exparte உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றும், தாவா வழக்கில் தனக்கு நல்ல எதிர்வாதம் உள்ளதாகவும், Exparte உத்தரவை ரத்து செய்து தங்கள் தரப்பு சான்றாவணம் மற்றும் சாட்சியங்களை விசாரித்து இறுதி முடிவு ஏற்படுத்த வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், தங்கள் தரப்பு வழக்கறிஞர் இறந்துவிட்டதால் வழக்கு விபரம் பற்றி தெரியவில்லை என்றும், இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே 01.04.2016 ம் தேதியன்று தங்களுக்கு எதிராக பிறப்பித்த Exparte உத்தரவை ரத்து செய்து வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டும் என்று மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிருரையின் சுருக்கம்:**

மனுவில் உள்ள சங்கதிகள் உண்மைக்கு மாறானவை என்றும், 1ம் எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட IA.NO.1/2020 மனுவின் பேரில் மனுதாரர் உள்ளிட்ட இதர பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்பிட உத்தரவு ஏற்பட்டதின் அடிப்படையில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகியுள்ளார்கள் என்றும், மேற்படி வழக்கில் எவ்வித எதிர்வாதமும் இல்லாத நிலையிலேயே ஆஜராகாமல் இருந்துவிட்டு தற்போது தங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட IA.NO.1/2025 மனுவின் பேரில் அழைப்பாணை அனுப்பப்பட்ட பின்னர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மேற்படி மனுவை உரிய காலத்தில் தாக்கல் செய்யாத நிலையில் எடுத்த எடுப்பிலேயே மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை : இம்மனு அனுமதிக்கத்தக்கதா / இல்லையா என்பதேயாகும் :-**

மனுதாரார்கள் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்கத்தகுந்த நிலையில் இல்லை. இருப்பினும் வழக்குகள் பெருகுவதை (For Avoiding the Multiplicity of Proceedings) தடுப்பதற்காகவும், நீதியின் நலன்கருதியும், 1ம் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட கஷ்டங்களுக்கு ஈடு செய்யும்வகையில், மனுதாரர்கள் ரூ.2000/-ம் செலவுத்தொகையாக செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

"Audi alteram partem is a Latin phrase meaning 'listen to the other side', or "let the other side be heard as well". It is the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them."

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் மனு அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள், 1ம் எதிர்மனுதாரருக்கு எதிர்வரும் 12.01.2026 ம் தேதிக்குள் ரூ.2000/- செலவுத்தொகையாக கொடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து– தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 டிசம்பர் 9ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.12.09 16:22:55 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.12.09 16:23:02 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**DISTRICT MUNSIF COURT**
**MANAMADURAI**

## ORDER

**I.A.No.3/2025**
**in**
**OS. No. 3/2014**

**Dated: 09.12.2025**